MUTHIALPET CIRCLE
No: 1798/CR/16
Date: 21/12/16

OFFICE OF THE
SUPDT. OF POLICE (EAST)
No. 5126/SP.E/OTR/16
Dated 20/12/16

புதுச்சேரி நகராட்சி
புதுச்சேரி
***

எண். 2445 /பு.ந./வ.அ -1/எ-2/2016 தேதி: 19.12.2016

## செய்திக்குறிப்பு

## ஓட்டல்களில் புத்தாண்டு கொண்டாட்டம் சம்பந்தமாக புதுச்சேரி நகராட்சி ஆணையர் அறிவிப்பு

புதுச்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 2017 புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, நட்சத்திர ஓட்டல்கள், இதர ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் மற்றும் பிற இடங்களில் தடைசெய்யப்பட்ட ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் போன்ற நடன நிகழ்ச்சிகள் நடத்துவது குற்றமாகும்.

புத்தாண்டை முன்னிட்டு உணவு, கேளிக்கை மற்றும் மெல்லிசை நிகழ்சிகள் ஆகியவை நுழைவு கட்டணம் பெற்று நடத்துவதாக இருந்தாலும் மேலும் 31.12.2016 இரவு 10.00 மணியிலிருந்து மறுநாள் அதிகாலை 01.00 மணிவரை கேளிக்கை நடத்துவதாக இருந்தாலோ நகராட்சிகள் சட்டத்தின்படி உரிமம் கோருவதற்கான விண்ணப்பத்தை கேளிக்கை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நாளுக்கு முன்னதாகவே அதாவது மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சியர் ஒப்புதல், துணை ஆட்சியர் (கலால்) ஒப்புதல், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் ஒப்புதல், தீயணைப்பு துறை அலுவலர் ஒப்புதல் சான்றிதழ்களுடன் புதுச்சேரி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பித்து உரிய கட்டணம் மற்றும் கேளிக்கை வரியினை செலுத்தி முன் அனுமதி பெற்ற பின்னர் நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டும்.

அனுமதியின்றி மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுமேயானல் புதுச்சேரி நகராட்சிகள் சட்டவிதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தகைய நிறுவனங்களில் வணிக உரிமம் ரத்து செய்யப்படும்.

மேலும், புத்தாண்டு நிகழ்ச்சிகள் எனற பெயரில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்வதோ, நமது பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை மீறும் வகையிலோ, பிறர் மனம் புண்படும் வகையிலோ செயல்படுவதோ கூடாது.

நகராட்சியின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது புதுச்சேரியின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகளைக் கண்காணிக்க நகராட்சி சார்பில் 3 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது.

Forwarded for Necessary action
Mut. PS / Kal. PS / O.P.

(இரா.சந்திரசேகரன்)
ஆணையர்

பெறுநர்: INSPECTOR OF POLICE
MUTHIALPET CIRCLE
PUDUCHERRY

1. செய்தி பிரிவு மேலாளர், தினமலர், புதுச்சேரி.
2. செய்தி பிரிவு மேலாளர், தினத்தந்தி, புதுச்சேரி.
3. செய்தி பிரிவு மேலாளர், தினகரன், புதுச்சேரி.
4. செய்தி பிரிவு மேலாளர், தினமணி, புதுச்சேரி.
5. செய்தி பிரிவு மேலாளர், தமிழ்முரசு, புதுச்சேரி.
6. செய்தி பிரிவு மேலாளர், மாலை மலர், புதுச்சேரி.
7. செய்தி பிரிவு மேலாளர், இந்து, புதுச்சேரி.
8. செய்தி பிரிவு மேலாளர், இந்தியன் எக்ஸ்பிரஸ் அலுவலகம், புதுச்சேரி.

CI Muthialpet / all SHO

20/12/16

SUPDT. OF POLICE (EAST)
PUDUCHERRY

நகல் சமர்ப்பிக்கப்படுதல் :

1. மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சியர், புதுச்சேரி.
2. இயக்குநர், உள்ளாட்சித் துறை, புதுச்சேரி.